செ.வெ.எண் 22 நாள்: 12.10.2020

பெரம்பலூர் மாவட்டம்

# சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தினையொட்டி 2 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.19 லட்சம் மதிப்பீட்டிலான வைப்பு நிதி பத்திரங்களை 38 பெற்றோர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தினையொட்டி 2 பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.19 லட்சம் மதிப்பீட்டிலான வைப்பு நிதி பத்திரங்களை 38 பெற்றோர்களுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (12.10.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப. அவர்கள் வழங்கினார்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ.ஆ.ப. அவர்கள் தெரிவிக்கையில்:**

பெண் குழந்தைகள் முன்னேற்றத்திற்காகவும், கல்விக்காகவும் மத்திய மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறது. பெண் குழந்தைகள் கல்விக்காகவும், குழந்தை திருமணத்தை தடுத்து, உயர்கல்வி கற்கவேண்டும் என்பதற்காக தாலிக்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவி திட்டத்தினை தமிழக அரசு சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது,

அதனைப்போன்று இரண்டு பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு பெண் குழந்தைகளின் எதிர்காலத்தினை கருத்தில் கொண்டும், பெண் குழந்தைகளை குடும்ப சுமையாக பெற்றோர்கள் கருதக்கூடாது என்பதற்காகவும், பெண் குழந்தைகள் வைப்பு நிதி திட்டத்தின் கீழ் ஒரு பெண் குழந்தை வைத்துள்ள பெற்றோரிடம் ரூ.50,000/-த்திற்கான வைப்பு நிதியும், 2 பெண் குழந்தைகள் உள்ள குடும்பத்திற்கு தலா ரூ.25,000/- வீதம் வைப்பு நிதி வழங்கும் திட்டத்தினை செயல்படுத்தி பெண் குழந்தைகளின் எதிர்காலத்தினை பாதுகாத்து வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு 2 பெண் குழந்தைகள் வைத்துள்ள 38 பெற்றோர்களின் குடும்பத்திற்கு ஒரு பெண் குழந்தைக்கு தலா ரூ.25,000/- வீதம் 76 பெண் குழந்தைகளுக்கு ரூ.19,00,000/- (ரூபாய் பத்தொண்பது லட்சம்) மதிப்பீட்டிலான வைப்பு நிதி பத்திரங்கள் வழங்கப்படுவதன் முதற்கட்டமாக 5 பெற்றோர்களிடம் பெண் குழந்தைகளுக்கான வைப்பு நிதி பத்திரங்கள் வழங்கப்பட்டன. பெண் குழந்தைகள் 18 வயது முதிர்வு அடைந்தவுடன் அவர்களுக்கு கணிசமான வைப்பு நிதி அவர்கள் வங்கி கணக்கில் சேர்க்கப்படும். எனவே பெற்றோர்கள் ஆண் குழந்தைகளுக்கு இணையாக பெண் குழந்தைகளையும் பாதுகாத்திட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி வே.சாந்தா, இ,ஆ.ப. அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மகிளா சக்தி கேந்திரா திட்ட மகளிர் நல அலுவலர் ஜெயந்தி, குடும்ப வன்முறை பாதுகாப்பு அலுவலர் முத்துச்செல்வி, வட்டார சமூக விரிவாக்க அலுவலர் முருகேஸ்வரி உள்பட பலர் கலந்துகொண்டனர்.

## வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.